
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஆக்டோபர் 14, 2023 Weekly E-paper ● October 14, 2023



## எங்கே போனது ஏழரை லட்சம் கோடி?

சுப.வீரபாண்டியன்

### பழனிசாமிக்கும் பாஜகவுக்கும் தமிழ்நாடு பாடம் புகட்டும்!

காசு. நாகராசன்

### இஸ்ரேல் - ஹமாஸ்! “நெருப்பை அணைய விடுங்கள்!”

தலையங்கம்

### சனாதனத்தைச் சாய்த்த சார்ல்ஸ் டார்வின்

தொகுப்பு : மதிவாணன்


# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஆக்டோபர் 14, 2023 Weekly E-paper ● October 14, 2023


# எங்கே போனது ஏழரை லட்சம் கோடி?

**சுப.வீரபாண்டியன்**



2009 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னால், எங்கு பார்த்தாலும் 1,76,000 கோடி ஊழல் நடந்து விட்டதாக நாடு முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. திமுக, காங்கிரஸ் கட்சிகளின் மீது அவதூறுகள் அள்ளி வீசப்பட்டன. எங்கோ ஹாங்காங்கில் இருக்கும் ஒரு வீட்டைப் படம்பிடித்துப் போட்டு, இதுதான் ஆ. ராசாவின் வீடு என்றார்கள்.

உண்மைகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வதற்குள், 2009 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது! அதன் பின்னால் தீர்ப்பளித்த சிறப்பு நீதிமன்றம், குற்றச்சாட்டிற்கு எந்த ஓர் ஆதாரத்தையும் அரசு காட்டவில்லை என்று கூறி, ஆ.ராசா உள்ளிட்டவர்களை விடுதலை செய்தது!

ஆனால் இன்று 7,50,000 கோடி ஊழல் நடந்துள்ளதாகத் தலைமைக் கணக்காயர் அறிக்கை கூறுகின்றது. ஆயுஷ்மான் திட்டம் முதலான ஏழு திட்டங்களில் இவ்வளவு பெரிய தொகை காணாமல் போய் இருப்பதை அந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. ஒன்றிய அரசில் ஆளும் கட்சியாக இருக்கும் பாஜக, அதனைக் கண்டு கொள்ளவே இல்லை. அதற்கு எந்த விடையும் சொல்லவும் இல்லை!

இந்நேரம் இதனை “இந்தியா” கூட்டணி நாடு முழுவதும் பெரிய அளவில் கொண்டு சென்றிருக்க வேண்டும். சில மாநிலங்கள்,சில கட்சிகள் தவிர பல இடங்களில் எதிர்க்கட்சிகள் இது குறித்துப் போதுமான அளவிற்குப் பேசவில்லை.

மாறாக, ஒன்றிய அரசு இப்போது ஒரு நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த நடவடிக்கை, அந்த ஊழலை ஏற்றுக் கொள்வதாகவோ, திருத்தம் செய்வதாகவோ அல்லாமல், அந்த அறிக்கையைத் தந்த முதன்மையான மூன்று அதிகாரிகளை இடம் மாற்றுவதாக அமைந்துள்ளது.

அந்த அறிக்கையைத் தயாரிப்பதில் முக்கியப் பங்கு வகித்த அருவா சின்கா, அசோக் சின்கா, தத்தம் குமார் ஆகியோர் அப்பொறுப்புகளில் இருந்து மாற்றப்பட்டுள்ளனர். இதுதான். ஊழலற்ற, நேர்மையான அரசு என்று மார்தட்டிக் கொள்ளும் பாஜக அரசின் நடவடிக்கை!

நம் நாட்டில் நடக்கும் எது குறித்தும், பிரதமர் மோடியோ, இந்திய ஒன்றிய அரசோ கவலை கொள்ளவில்லை. மணிப்பூர் பற்றி எரிந்தாலும், 7,50,000 கோடி ஊழல் கொடி கட்டிப் பறந்தாலும், எதுவுமே நடக்காதது போல் இருக்கும் இவர்கள், இஸ்ரேல் – பாலஸ்தீனத்தில் நடைபெறும் போரில், ஹமாஸ் செய்தது தவறு என்று தீர்ப்பளிக்கும் யோக்கியர்களாக இருக்கிறார்கள்.

பாஜக அரசு செய்துள்ள ஊழலையும், நாட்டில் நடைபெறும் மதவெறி வன்முறைகளையும் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு, எல்லா எதிர்க்கட்சிகளுக்கும், ஜனநாயக வாதிகளுக்கும் இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது!







# பழனிசாமிக்கும் பாஜகவுக்கும் தமிழ்நாடு பாடம் புகட்டும்!

காசு.நாகராசன்



காவிரியில் தமிழ்நாட்டின் உரிமைப்படி ஜூன் மாதம் 9.19 டி எம் சி தண்ணீர் தமிழ்நாட்டிற்கு கர்நாடகம் வழங்கி இருக்க வேண்டும். ஆனால் வழங்கவில்லை. மாறாக 2.833 டிஎம்சி தண்ணீர் மட்டுமே வழங்கியது. தமிழ்நாட்டின் உயிர்த் தேவைக்கு தண்ணீர் வழங்காமல்

ஒட்டுமொத்த கர்நாடக அரசியல் கட்சிகளும் அங்கே ஒன்றுபட்டு நின்று காவிரியை மறிக்கிறது.

குறுவை அறுவடைக் காலம் வரையிலும், அதன் பின்னர் சம்பா சாகுபடிக்கும் இப்போது நமக்குத் தண்ணீர் வேண்டும். ஆனால் ஒரு சொட்டு நீரைக் கூடத் தமிழ் நாட்டிற்குத் திறந்து விடக் கூடாது என கர்நாடக அரசை மிரட்டுவது ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே தேர்தல் என்று ஒரே ஒரே கோட்பாடு போடுகிற பாஜகவின் கர்நாடக முன்னாள் முதல்வர் பொம்மைதான்.

காவிரி நீர் மேலாண்மை வாரியத் தலைவர் சந்திப்பு, காவிரி நீர் ஒழுங்காற்று குழுவில் முறையீடு, பிரதமருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் கடிதம், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு, மீண்டும் செப்டம்பர் 19ஆம் தேதி அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஒன்றிய அமைச்சர் சந்திப்பு என நெடிய சட்டப் போராட்டத்தை இடைவிடாமல் நடத்தி வருகிறது தமிழ்நாடு அரசு.

அதேசமயம் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கும், பாஜக சட்டமன்ற உறுப்பினர் வானதிக்கும் உள்ள மாறுபட்டக் கருத்தை அண்மையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாண்புமிகு திராவிட மாடல், தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டு வந்த 'ஒன்றிய அரசை வலியுறுத்துகிற' தீர்மானத்தின் மீது மேற்கண்ட இருவரும் பேசிய பேச்சிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பாஜகவின் வானதிக்காவது திருடனைத் தேள் கொட்டிய கதை.

தீர்மானத்தை ஆதரித்து விட்டால், ' ப்ரௌடு கன்னடிகா' மிஸ்டர் அண்ணாமலையின் கோபத்திற்கும், ஒரே நாட்டின் ஒரே பிரதமர் மோடியின் கோபத்திற்கும் ஆளாக வேண்டும்.

அதற்குப் பதிலாக தமிழ்நாட்டின் உரிமைக்கும், தமிழர்களின் குறிப்பாக டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் துரோகம் இழைத்தாலும் சரி, முதல்வரின் தீர்மானத்தை மட்டும் ஆதரித்து விடக்கூடாது என்கிற கவலையில் எதையெதையோ சம்பந்தமில்லாமல் உளறி கொட்டி விட்டு வெளியேறி விட்டார்.

எடப்பாடி பழனிசாமி சொல்கிறார், தண்ணீர் தராத கர்நாடக ஆட்சியாளர்களான காங்கிரசோடு திமுக எப்படிக் கூட்டணி வைக்கலாம்?

இண்டியா கூட்டணிக் கூட்டத்தில் ஏன் காவிரி நீரைக் கேட்கவில்லை? என்றெல்லாம் பேசுகிறார். அவரது மொழியிலேயே சொல்வதானால்

" இதெல்லாம் ரொம்ப தப்புங்க பழனிசாமி"

கர்நாடகாவிடம் ஏன் பேசவில்லை என்று பிரச்சனையை மீண்டும் 'ரிவர்ஸ் கியரில்' தொடங்கச் சொல்லுகிறார் பழனிசாமி.

இப்போது பழனிச்சாமி, காவிரி நீரை திறந்தால் தான் கூட்டணி என்று திமுக சொல்ல வேண்டும் என்கிறார்.

கட்சி, அரசியல், கூட்டணி, கொள்கை, கோட்பாடு என்று எதுவும் தேவையில்லை பழனிசாமிக்கு. காரணம் அவர் வந்த வழித்தடம் அப்படி. மண்டி போடவும், காலைத் தேடவும் திறமை இருந்தால் போதுமானது என்கிற கொள்கைதான் மிஸ்டர் பழனிச்சாமியின் ஒரே கொள்கை.

திருவாளர் பழனிசாமிக்கு நாம் இரண்டு கேள்வி தான் கேட்க விரும்புகிறோம். பாஜகவின் எந்தத் திட்டத்தை, எந்தச் சட்டத்தை அல்லது எந்த செயல்பாட்டைக் கண்டித்துக் கூட்டணியில் இருந்து விலகி வந்தீர்கள் பழனிசாமி?

இரண்டாவது நேற்று வரை வெளிப்படையான கூட்டணியிலும், இன்று வரை ரகசிய ஒப்பந்தக் கூட்டிலும் இருக்கிற மிஸ்டர் பழனிசாமி அவர்களே, பாஜகவை எதிர்த்தல்ல ஒன்றிய அரசு தமது கடமையைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிற தமிழ்நாடு அரசின் தீர்மானம் எந்த அடிப்படையில் உங்களுக்கு மாறுபட்டது?

பழனிசாமிகளிடம் இதற்குப் பதில் இருக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

ஆனால் சமூக நீதித் தமிழ்நாடு இவை அனைத்தையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு காத்திருக்கிறது

தேர்தல் களத்தில் கணக்கு தீர்க்க!

பழனிசாமிகளும் வானதிகளும் தயாராக இருங்கள்.

மக்கள் உங்களுக்கு விடை கொடுக்கும் காலம் தொலைவில் இல்லை!

○

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## இஸ்ரேல் – ஹமாஸ்!
## “நெருப்பை அணைய விடுங்கள்!”

அதோ குண்டுகளின் சத்தங்கள் கேட்டுக் கொண்டு இருக்கின்றன. வீடுகள், நகரங்கள் தரைமட்டமாகின்றன. பிணக்குவியல்கள், உறுப்பு இழந்தவர்கள், அழுகுரல்கள். சகிக்க முடியாத வேதனையல்லவா இது! என்ன காரணம்?

நாடற்றவர்களாக, கேட்பாரற்றவர்களாக சிதறிக் கிடந்த யூதர்கள், பாலஸ்தீனத்தில் குடியேறத் தொடங்கினார்கள். பாலஸ்தீனத்தை அடுத்த ஜோர்தானும், பெத்தலேகமும் யூதர்களால் புனித இடங்களாகக் கருதப்பட்டன.

பாலஸ்தீனத்தின் மைந்தர்களான அரபு முஸ்லீம்களும் தங்களின் புனித இடங்கள் அங்கு இருக்கின்றன என்று சொன்னாலும், அது அந்த மண்ணின் மைந்தர்களுக்குச் சொந்தமான நாடு.

யூதர்கள் பாலஸ்தீனத்தை ஊடுருவி ஆக்கிரமிக்கத் தொடங்கியது முதல் பாலஸ்தீனியர் – யூதர் மோதல் தொடங்கி விட்டது.

இப்பிரச்சனையைத் தீர்க்க ஐ.நா. மன்றம் பாலஸ்தீனத்தை, பிரிட்டனிடம் ஒப்படைத்தது.

பிரிட்டன் நியாயமாக நடந்து கொள்ளவில்லை. பிரித்தாளும் சூழ்ச்சியுடன், யூதருக்கு ஆதரவாக ஒருபக்கம் சாய்ந்து நின்றது.

1917 நவம்பரில் பிரிட்டனின் ‘பால்போர் பிரகடன’ த்தில் “பாலஸ்தீனத்தில் யூதர்களுக்குத் தாயகம் ஏற்படுத்தித்தருவது பிரட்டனின் நோக்கம் “ என்று வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தியது.

1928, அரபுக் காங்கிரஸ் ஒன்றுகூடி ஜனநாயக முறையில் அரசு அமையவும், பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும் குரல் எழுப்பினார்கள். 1929இல் பாலஸ்தீனியர் – யூதர்களிடையே ஏற்பட்ட கலவரங்கள் வளர்ந்து, இன்று பாலஸ்தீன – இஸ்ரேல் பெரும்போராக மறிவிட்டன.

பாலஸ்தீனியர்கள் இழந்த மண்ணின் உரிமைக்காகப் போராடுகிறார்கள். இஸ்ரேலியர், தான் ஆக்கிரமித்த நாட்டைக் கொடுக்க மாட்டோம் என்று மல்லுக்கு நிற்கிறார்கள்.

அதுதான் இன்று ஹமாஸ் ஆயுதப் பிரிவினருக்கும், இஸ்ரேலுக்கும் இடையே போராக மூண்டு தீ பற்றி எரிகிறது.

எந்த ஒரு பிரச்சனையையும் ஆயுதங்களால் நிரந்தரமாகத் தீர்வு காண முடியாது. இன்றைய அறிவியலில் வளர்ந்துள்ள நவீன ஆயுதப் போர் என்பது, நினைத்துக் கூடப் பார்க்க முடியாத கொடுமையின் அடையாளங்கள். அழிவுகளின் மூலம் ஆக்கத்தைத் தரமுடியாது இரண்டு தரப்பினராலும்.

உடனடியாக ஐ.நா.மன்றம் இதில் தலையிட வேண்டும். முதலில் போரை நிறுத்த வேண்டும்.

உலக நாடுகள் அமைதி வழியில் இஸ்ரேல் -பாலஸ்தீனப் பிரச்சனைக்குத் தீர்வு காண முன்வேண்டும்.

யுத்தம், கொலை இவைகளை அனுமதிக்கக் கூடாது.

பைபிளின் மூலம் யேசு அன்பைச் சொல்கிறார் என்பதை யூத இஸ்ரேலியர் புரிந்து கொள்ள வேண்டும்!

குரான் மூலம் நபிகள் நாயகம் சகோதரத்துவத்தை வலியுறுத்துகிறார் என்பதைப் பாலஸ்தீனியர் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒழிந்து போகட்டும் போர்கள்! மலர்ந்து வளரட்டும் சமாதானமும், அமைதியும்!

## பேராசிரியர் அன்பழகனார் படிப்பு வட்டம்
## மதுரை, 08-10-2023!







ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# சனாதனத்தைச் சாய்த்த சார்ல்ஸ் டார்வின்

**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்** தொகுப்பு : **மதிவாணன்**

*(இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பாக மதுரையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி....)*



அது உலகில் மாற்றங்களுக்கான புதிய கண்டுபிடிப்புகள் வந்து கொண்டு இருந்த காலம் . 1848 பிப்ரவரி 21, பொதுவுடைமைக் கட்சி அறிக்கை.1856இல் தமிழ்நாட்டைப் புரட்டிப் போட்ட கார்டுவெல் ஒப்பிலக்கணம். மைக்கல் பெரடே, சீமன்ஸ், தாமஸ் ஆல்வா எடிசன், டெஸ்லா ஆகியோரின் மின்னாற்றல் கண்டுபிடிப்புகளுக்கு இடையில் டார்வினின் மாபெரும் கண்டுபிடிப்பு 1856 இல் வெளிவந்தது. இந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பகுதி என்பது உலகை மாற்றிப் போட்ட காலம். 17, 18 நூற்றாண்டிலேயே வானியல் ஆய்வுகள் தொடங்கின. கெப்லர், கோப்பர் நிக்கோலஸ், கலிலியோ, ப்ரூனோ என்று பலர் வருகின்றார்கள்.

அறிவியலில் ஒன்றை இவர் கண்டுபிடித்தார் என்று சொல்லுவது வெறும் அடையாளத்திற்காக மட்டுமே. எந்த ஒரு தனிமனிதனும் எதையும் முழுமையாகக் கண்டுபிடிக்கவில்லை, அனைத்தும் தொடர்ச்சி தான். படிப்படியாக வளர்ந்து இறுதி இடத்திற்கு வருகிற பொழுது அதைச் சொன்னவர் அறியப்படுகின்றார். ஆனால் மதங்கள் அப்படியல்ல. நேரடியாகக் கடவுளில் இருந்து வந்தது என்பார்கள். இரண்டிற்குமான அடிப்படை வேறுபாடே அறிவியல். அது பரிணாம வளர்ச்சி உடையது. மதம் என்பது பரிணாம வளர்ச்சிக்கு எதிரானது. அறிவியலை யாரும் கேள்வி கேட்கலாம். மதத்தைக் கேள்வி கேட்க யாருக்கும் உரிமை இல்லை என்கிறார்கள். ஆனால் கேள்வி கேட்பது தான் அறிவியல். திராவிட இயக்கம் ஓர் அறிவியல் இயக்கம் என்பதற்கான அடிப்படை எது என்றால், கூட்டத்திற்கு வருபவர்களைத் தன்னிடம் கேள்வி கேளுங்கள் என்று சொன்னவர் பெரியார்...

டார்வின் கோட்பாடு படி இவ்வுலகத்தில் நிலையானது என்று எதுவுமில்லை. மாறாதது என்று எதுவுமில்லை. அழியாதது என்று எதுவுமில்லை. இப்பொழுது புரிகின்றதா "சனாதம்" சாய்ந்த இடம்? அழியாதது, மாறாதது என்று எதுவுமில்லை. அழியாது, மாறாது என்று யாராவது சொன்னால் அதைவிடச் சிறந்த பொய் ஏதுமில்லை. காலம் உறைவதில்லை. காலம் உறையாதவரையில் உலகின் எந்த ஒன்றும் உறைவதில்லை.

டார்வின் உயிரினத்திற்கு அடிப்படை உந்துதலாக இரண்டை சொல்கிறார். 1. இருத்தல், 2. பெருகுதல். உயிரினத்தில் போட்டி என்பது தன் இனத்துக்குள்ளான போட்டி, பிற இனத்திற்கு இடையிலான போட்டி என்று இரு வகைகளில் நடைபெறுகின்றது. ஏன் குயில் காக்கைக் கூட்டில் முட்டையிடுகின்றது? ஏன் என்று கேட்பது தான் அறிவியல். நியூட்டனுக்கு முன்பும் ஆப்பிள் பழம் கீழே விழுந்தது. எல்லோரும் எடுத்து தின்றுவிட்டுச் செல்லும் பொழுது, ஏன் கீழே விழுகிறது என்று கேட்டது நியூட்டன் தான். அதன்விளைவாகத் தான் புவிஈர்ப்புவிசை கண்டறியப்பட்டது.

இவ்வளவிற்கும் டார்வின் காலத்தில் குரோமோசோம், நியுக்ளியஸ் போன்றவை கண்டறியப்படவில்லை. ஆனால் இவ்வளவு விளக்கமாகப் பலவற்றை எழுதி இருக்கின்றார். பின்பு ஏன் எதிர்க்கப்பட்டார்? ஏன் என்றால், ஒன்று இவ்வுலகம் கடவுளால் படைக்கப்பட்டது என்று கருதப்பட்ட நிலையில், டார்வின் ஓர் உயிரில் இருந்து, அது இன்னொன்றாக மாறுகிறது என்றார். இரண்டாவது காரணம் மனித உயிர் தான் இவ்வுலகத்தில் தனிச்சிறப்பு வாய்ந்தது என்று கருதப்பட்ட நிலையில் டார்வின் அப்படியில்லை, எல்லாம் உயிர்தான் என்றார். டார்வினுக்குப் பின்பும் இப்பொழுதும் அந்தத் துறையில் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

